**கவனிக்க.**- *2011.04.21 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1704 - 2011 අප්‍රේල් මස 29 වැනි සිකුරාදා - 2011.04.29
*1704 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 525 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2011, மே மாதம் 6 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை

(இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு)

தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2011

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந்து 2011 ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேவையான ஆகக் குறைந்த தகைமைகள் வருமாறு :-

1. (அ) **வயது**.- 2011.03.31 ஆந் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வி**.- (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ்/சிங்களம் (போதனாமொழி), கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) விசேட திறமையுள்ள விண்ணப்பதாரிகள்- மின்சாரவியல்/இலத்திரனியல்/இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய/மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினைப் பெற்ற சான்றிதழுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ்/சிங்களம் (போதனா மொழி), கணிதம் உட்பட 6 பாடங்களில் இரண்டு அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- தேசிய தொழில் பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபை (NAITA) யில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினைப் பெறுவோர் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையோர் அல்லர்.

2. **பயிற்சி போதனைகள்**.- சிங்களத்தில் எல்லாப் பாடநெறிகளும், தமிழில் மோட்டார் இயந்திரவியல் பாடநெறியும் நடத்தப்படும்.

3. **நுழைவுத் தேர்வு**.- தேவையான தகைமைகளையுடைய, கீழே 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரிகள் மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**பரீட்சை நிலையம்**.- அனுமதிக்கான எழுத்துமூல பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். இவை தவிர வேறு மாவட்டங்களிலிருந்து குறிப்பிட்ட அளவிற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றால் அம்மாவட்டத்திலும் பரீட்சை நிலையம் அமைக்கப்படும்.

**எழுத்து மூலப் பரீட்சை**.- கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட 2 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

4. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் ரூபா 400 ஐ ஏதாவதோர் இலங்கை வங்கிக் கிளையில் கணக்கு இலக்கம் 681490, மொரட்டுவைக் கிளைக்கு வைப்பிலிட்டு அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அழிந்துபோன அல்லது வேறு மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேற்கூறிய பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை விசேடமாகக் கவனத்திற் கொள்க.

5. **ஆரம்ப தேர்வு முறை**.- எழுத்து மூலப்பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளது. (இவ்வெட்டுப்புள்ளி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

6. **இறுதித் தேர்வு முறை**.- நேர்முகப் பரீட்சைக்கு முன்பதாக செயல்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறை பரீட்சையின் 40% உம் நேர்முக பரீட்சையின் 60% உம் புள்ளிகளாக வழங்கப்படும். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும். பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோர் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

7. **பயிற்சி நெறி :**

| | |
|---|---|
| மோட்டார் இயந்திரவியல் | - 04 ஆண்டுகள் |
| மில்றைற்/வார்ப்பியல் | - 04 ஆண்டுகள் |
| காற்று பதனமாக்கல்/குளிரூட்டல் | - 03 1/2 ஆண்டுகள் |
| வலு மின்சாரவியல் | - 03 1/2 ஆண்டுகள் |
| ஆயுத இயந்திரவியல் | - 03 1/2 ஆண்டுகள் |
| வாகன மின்சாரவியல் | - 03 ஆண்டுகள் |
| டீசல் இயந்திரவியல் | - 03 ஆண்டுகள் |
| உருக்கியிணைத்தல் | - 03 ஆண்டுகள் |
| வாகன உடல் திருத்தலும் வர்ணம் தீட்டுதலும் | - 03 ஆண்டுகள் |

முதலாம் வருடம் நடத்தப்படும் அடிப்படைப் பயிற்சியின் முடிவில் நடைபெறும் தொழிற்துறை தேர்வுப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளையும் ஆற்றல்களையும் அடிப்படையாகக் கொண்டே உமக்கான தொழிற்துறை தெரிவுசெய்யப்படும்.

8. **பிணை முறை கைச்சாத்திடல்**.- 4, 3 1/2, 3 வருட பயிற்சிக்கு தெரிவுசெய்யப்படுவோர் இ. ஜே. தொ. ப. நிறுவகத்துடனும் தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபையுடனும், பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேனென உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும். அத்துடன் பயிற்சியின் பின்னர் இலங்கை போக்குவரத்து சபையில் குறைந்தது இரண்டு வருடங்கள் பணியாற்றுவேனெனவும் பிணைமுறி ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப (ஏ4) அளவில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு :-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) கல்விச் சான்றிதழ் ;

(இ) இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் (இரண்டு அமர்வுகளில் சித்தியடைந்தவர்கள்).

ஆகிய ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன்,

"முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும், இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், இல. 582, காலி வீதி, கல்கிசை" என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுனர்களை சேர்த்தல் 2011" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.cgtti.slt.lk என்னும் இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

9. **விண்ணப்ப முடிவுத் திகதி.**- விண்ணப்பங்கள் 2011.06.14 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

முகாமையாளர்,
மனித வளமும் நிர்வாகமும்.

இலங்கை - ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவகம்,
இல. 582, காலி வீதி,
கல்கிசை.
தொலைபேசி இல. : 011-2605625.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை**

*தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின்கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2011*

1. (அ) முழுப் பெயர் (தமிழில்) :-----.
   (ஆ) முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) :-----.
   (ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

2. (அ) அஞ்சல் முகவரி (ஆங்கிலத்தில்) :-----.
   (ஆ) மாவட்டம் :-----.
   (இ) மாகாணம் :-----.

3. (அ) பிறந்த திகதி :-----.
   (ஆ) 2011.03.31 ஆந் திகதியன்று வயது :-
   வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.
   (இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
   (ஈ) தொலைபேசி இலக்கம் :-----.

4. பால் (ஆண்/பெண்) :-----.

5. கல்வித் தகைமைகள் :-
   க. பொ. த. (சா. த.) பரீட்சை :
   ஒரே அமர்வில் பெற்ற பெறுபேறு :
   சுட்டெண் :-----.
   ஆண்டு :-----.

| | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| (1) | ........................................ | .................... |
| (2) | ........................................ | .................... |
| (3) | ........................................ | .................... |
| (4) | ........................................ | .................... |
| (5) | ........................................ | .................... |
| (6) | ........................................ | .................... |
| (7) | ........................................ | .................... |
| (8) | ........................................ | .................... |

இன்னுமோர் அமர்வில் பெற்ற பெறுபேறு (புத்தாக்குநர் ஆணைக்குழு சான்றிதழ் பெற்றவர்கள் மட்டும்) :
சுட்டெண் :-----.
ஆண்டு :-----.

| | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| (1) | ........................................ | .................... |
| (2) | ........................................ | .................... |
| (3) | ........................................ | .................... |
| (4) | ........................................ | .................... |
| (5) | ........................................ | .................... |
| (6) | ........................................ | .................... |
| (7) | ........................................ | .................... |
| (8) | ........................................ | .................... |

6. இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள துறை :-----.

7. (அ) பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி :-----.
   (ஆ) பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நிலையம் :-----.
   (கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலை)

8. பணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளையின் பெயர் :-----.
   (ரூபா 400 பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி இணைக்கப் படல் வேண்டும்.)

என்னால் வழங்கப்பட்ட மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதி மொழிகின்றேன். இந்த விபரங்களில் ஏதாவது பொய்யானவை என தெரிவின்முன்போ அல்லது பின்போ கண்டுபிடிக்கப் பட்டால் தகைமையற்றவனாக கருதப்படவோ அல்லது பயிற்சியி லிருந்து நீக்கப்படுவதற்கோ ஏதுவாவேன் என்பதையும் அறிவேன்.

.......................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

4-700

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

**எந்திரவியற் தொழிநுட்பவியல் நிறுவகம் (முன்னைய தொழிநுட்பவலர்ப் பயிற்சி நிறுவகம்) - கட்டுநாயக்கா**

***எந்திரவியல் விஞ்ஞானத்திலான தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு (N.D.E.S) எந்திரவியல் சிறப்புப் பயிலுநர்களை ஆட்சேர்த்தல் - 2011***

கட்டுநாயக்கா எந்திரவியற் தொழிநுட்பவியல் பயிற்சி நிறுவகத்தில் (முன்னைய தொழிநுட்பவலர்ப் பயிற்சி நிறுவகம்) மேற்படி பாடநெறிக் கற்கை தொடர்பான 2011 இன் குழுவுக்காக எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. **அனுமதிக்கான கல்வித் தகைமைகள்**.- கீழ்க்குறிப்பிட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் ஆவர் :-

1.1 க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், மொழி ஆகியவற்றில் 3 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி.

அத்துடன்

1.2 க. பொ. த. (உ.த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டத்தில்) ஒரே அமர்வில் இணைந்த கணிதம், பௌதிகம், இரசாயனவியல் பாடங்களில் சித்தி.

2. **வயது** : 2011, திசெம்பர் 1 ஆந் திகதியன்று 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல்.

3. **காலமும் பாடநெறியின் அட்டவணையும்**.- கீழே குறிப்பிட்ட வாறு, 18 மாதங்கள் போதனைத் திட்டத்தையும் 30 மாதங்கள் கைத்தொழில் பயிற்சியையும் கொண்ட நான்கு வருடத்திற்குரிய இரட்டைமுறை பாடநெறியாகும் :-

| | |
|---|---|
| ஐ. ஈ. ரி. இல் அடிப்படைப் போதனைத் திட்டம் | - 06 மாதம் |
| கைத்தொழிலான அடிப்படைக் கைத்தொழில் பயிற்சி | - 12 மாதம் |
| ஐ. ஈ. ரி. இல் பொது போதனைத் திட்டம் | - 06 மாதம் |
| கைத்தொழிலான பொது கைத்தொழில் பயிற்சி | - 12 மாதம் |
| ஐ. ஈ. ரி. இல் சிறப்புப் போதனைத் திட்டம் | - 06 மாதம் |
| கைத்தொழிலான சிறப்புக் கைத்தொழிற் பயிற்சி | - 06 மாதம் |

போதனைத் திட்டங்கள் தொழில்நுட்பவலர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கோட்பாட்டுப் போதனையையும் பாடநெறி தொழிற்பாட்டுப் பயிற்சியையும் உள்ளடக்குகின்றன.

அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழிற் தாபனங்களில் கைத்தொழிற் பயிற்சி நிகழ்ச்சி முறைகள் நடாத்தப்படும். பயிற்சி ஆரம்பிப்பதற்கு முன் 100 மணித்தியாலத்திற்கு செறிவான ஆங்கில பயிற்சிநெறி நடைபெறுவதுடன் அதற்கு தெரிவுசெய்யப்பட்ட அனைத்து பயிலுநர்களும் தவறாது சமுகமளிக்க வேண்டும்.

4. இந்த ஐ. ஈ. ரி. இல் நடாத்தப்படும் பாடநெறிகள் கீழே தரப்பட்டுள்ளன :-

(அ) குடிசார் எந்திரவியற் பிரிவு :
- (1) கட்டட அமைப்பு எந்திரவியல்
- (2) பெருந்தெருக்கள் புகையிரத பாதை எந்திரவியல்
- (3) நீர் சுற்றாடல் எந்திரவியல்

(ஆ) மின் எந்திரவியற் பிரிவு :
- (1) இலத்திரனியல் எந்திரவியல்
- (2) மின்வலு எந்திரவியல்
- (3) தொலைத்தொடர்பு எந்திரவியல்

(இ) பொறிமுறை எந்திரவியற் பிரிவு :
- (1) பொறிமுறை (தன்னசைவு) எந்திரவியல்
- (2) பொறிமுறை (பொது) எந்திரவியல்
- (3) ஆழி எந்திரவியல்

(அ) ஐ. ஈ. ரி. இன் ஆழி எந்திரவியல் பிரிவின் (இல. 9) தரத்தன்மை முகாமைத்துவ முறை ஐ. எஸ். ஓ. 9001-2008 இன் அவசியபாடுகளுக்கு அமைவானதாகும்.

(ஆ) ஆழி எந்திரவியல் பாடநெறி தொடர்பாக, இந் நிறுவனம் எஸ்.ரி.சீ.டபிள்யூ.-95 வுடனும் இதன் திருத்தங்களுடனும் மற்றும் சர்வதேச ஆழி அமைப்பின் (எஸ்.ரி.சீ.டபிள்யூ.) நிறைவேற்றத்தின் திருத்தப்பட்ட மாதிரி நெறியான சர்வதேச ஆழி அமைப்பின் (ஐ.எம்.ஓ.) 7.04 வுடனும் தொடர்பான இயங்கு மட்டத்திலான ஆழி எந்திரவியலின் பொறுப்பாணை, அறிவு விளங்கல், திறன் ஆகியவற்றை எதிர் கொள்ளும் வகையில் கல்வி போதனைகளையும் கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சி முறைகளையும் அளிக்கிறது.

5. **போதனா மொழிமூலம்** : ஆங்கிலம்

6. **தொழிற் பயில்நிலை ஒப்பந்தம்** :

6.1 பயிற்சி தாபனத்திற்கும் பயிலுநருக்கும் இடையே பரஸ்பர கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும், பயிற்சியளிக்கும் தாபனத்துடனான ஒப்பந்தமொன்றுக்குள் தெரிவுசெய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் உட்படுத்தப்படுவார். பாடநெறி பூர்த்தியின்போது மீளளிக்கப்படக்கூடிய 5000 ரூபாவை பதிவின்போது, பயிலுநர் வைப்பாக்கல் வேண்டும். பாடநெறியை இடைநடுவில் விட்டுச் செல்வோருக்கு இவ்வைப்பு மீளளிக்கப்படமாட்டாது.)

6.2 கைத்தொழிற் பயிற்சி விடயத்தில், பயிலுநர் தாபனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

6.3 பயிற்சி பூர்த்தியில் தொழில் வழங்கப்படுவதற்கான உத்தரவாதமேதுவுமில்லை.

6.4 பாடநெறிக்கு பயிலுநரொருவர் பதியப்பட்டு பாடநெறி முடிவுறும் வரை ஆகக்குறைந்தது 80% வரவு தேவைப் பாடாகும். மேற்படி தேவைப்பாட்டை பூர்த்திசெய்யாத மாணவர் பரீட்சைக்குத் தோற்ற முடியாததுடன், அவர் ஆட்சேர்க்கப்பட்ட குழுவில் இருந்து கல்வியைத் தொடர முடியாததுடன் அதற்கு அடுத்துவரும் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்.

7. **சான்றிதழ் வழங்கல்**.- இப்பாடநெறியைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்வோருக்கு எந்திரவியல் விஞ்ஞானத்திலான தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

8. **தெரிவுசெய்யும் பிரமாணங்கள்** :

8.1 மேலே பந்தி 1 இல் தரப்பட்டுள்ள மிகக்குறைந்த அனுமதித் தகைமைகளையும் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வயது வரையரையுமுடைய எல்லா விண்ணப்பதாரிகளும் தகுதியுடையோர் ஆவர். தெரிவுகள் கீழே தரப்பட்டுள்ள முறையில் நடைபெறும்.

8.2 8.1 இன்படி தகைமையான தேர்வுநாடிகள் ஆங்கில மொழி மூலமான உளச்சார்பு எழுத்துப் பரீட்சைக்கு ஆங்கிலத்தில் தோற்றுதல் வேண்டும்.

8.3 விருப்பத் துறை சிறப்பாக்கம் மற்றும் உளச்சார்பு சோதனை யில் சித்திநிலை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்ட துறைகளுக்கும் சிறப்பாக்கங்களுக்கும் விண்ணப்பதாரியை தெரிவுசெய்வதற்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

8.4 ஆழி எந்திரவியலுக்குத் தெரிவுசெய்யப்பட்டோர் பதிவாக்கலுக்கு முன் தமது சொந்த செலவில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும்.

9. **விண்ணப்பங்கள்** :

9.1 விண்ணப்பங்களையும் மேலதிக தகவல்களையும் I. E. T. இணைய தளத்திலிருந்து (www.iet.edu.lk) இல் பெற்றுக் கொள்ளலாம்.

9.2 விண்ணப்பப்படிவங்களை 2011.06.18 ஆந் திகதி வரை ரூபா 100 செலுத்தி கட்டுநாயக்க, டெம்பல் வீதியிலுள்ள எந்திரவியற் தொழிநுட்பவியல் நிறுவனத்தின் பதிவாளரிட மிருந்து அல்லது ரூபா 100 க்கான காசுக்கட்டளையை சுய முகவரியிட்ட முத்திரையுடனான 9" x 4" அளவிலான கடித உறையுடன் (5 ரூபா) "பதிவாளர், எந்திரவியற் தொழிநுட்பவியல் நிறுவகம், டெம்பல் வீதி, கட்டுநாயக்க" (தொலைபேசி இல. : 011-2252833, 011-2252834) என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி காசுக்கட்டளைகள், ''கணக்காளர் எந்திரவியல் தொழில்நுட்பவியல் நிறுவகம்'' என்பவரின் பெயருக்கு கட்டுநாயக்கா அஞ்சலகத்தில் மாற்றக்கூடியதாய் எழுதப்படல் வேண்டும்.

9.3 மேலும் 2011.06.18 ஆந் திகதிவரை ரூபா 100 பணமாகச் செலுத்துவதன் மூலம் பின்வரும் அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் :-

(1) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, 971, ஸ்ரீயவர்த்தனபுர மாவத்தை, வெலிக்கடை, இராஜகிரிய.
தொலைபேசி இல. 011-2863680, 011-2867435.

(2) தொழிற்பயில்நிலைப் பயிற்சி நிறுவகம், இல. 581, காலி வீதி, கட்டுபெத்தை, மொறட்டுவை.
தொலைபேசி இல. 011-2647393, 011-2641092.

(3) தன்னசைவுள்ள எந்திரவியல் பயிற்சி நிறுவகம், இல. 7, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, ஒறுகொடவத்தை, வெல்லம்பிட்டியா.
தொலைபேசி இல. 011-2572977, 011-2532182.

(4) நயிட்டா மாவட்ட அலுவலகம்-கொழும்பு, இல. 242, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
தொலைபேசி இல. 011-2597671-2, 011-2587258.

(5) நயிட்டா மாவட்ட அலுவலகம்-களுத்துறை, காலி வீதி, பேருவளை
தொலைபேசி இல.: 034-2279710.

(6) நயிட்டா மாவட்ட அலுவலகம்-மாத்தளை, இல. 11, கோவில் வீதி, மண்டானவல, மாத்தளை.
தொலைபேசி இல.: 066-2223173.

(7) நயிட்டா மாவட்ட அலுவலகம், இல. 288, குமாரசிங்க மாவத்தை, பசறை வீதி, பதுளை.
தொலைபேசி இல. 055-2222608.

(8) நயிட்டா மாவட்ட அலுவலகம்-பதுளை, இல. 56, ஆனந்த மாவத்தை, கம்பஹா.
தொலைபேசி இல.: 033-2227501.

(9) நயிட்டா மாவட்ட அலுவலகம்-இரத்தினபுரி, பாடசாலை ஒழுங்கை, புதிய நகரம், இரத்தினபுரி.
தொலைபேசி இல. 045-2228667.

(10) நயிட்டா மாவட்ட அலுவலகம்-மாத்தறை, இல. 27A, திறந்த பல்கலைக்கழக வீதி, நூப்பே, மாத்தறை.
தொலைபேசி இல. 041-2226985.

(11) நயிட்டா மாவட்ட அலுவலகம்-கண்டி, இல. 108/2B, திவங்க போதி மாவத்தை, கண்டி.
தொலைபேசி இல. 081-2201918.

(12) நயிட்டா மாவட்ட அலுவலகம்-அநுராதபுரம், விமான நிலைய வீதி, அநுராதபுரம்.
தொலைபேசி இல. 025-2223178.

(13) நயிட்டா மாவட்ட அலுவலகம்-குருநாகல், நீர்கொழும்பு வீதி, குருநாகலை.
தொலைபேசி இல. 037-2221865/037-2223789.

(14) நயிட்டா மாவட்ட அலுவலகம், வட மாகாணம்-யாழ்ப்பாணம், முல்லைத்தீவு 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021-2222383.

(15) நயிட்டா மாவட்ட அலுவலகம்-அம்பாறை, இல. 6, ஜீ. ஏ. எஸ். ஒழுங்கை, கல்முனைகுடி-13, கல்முனை.
தொலைபேசி இல. 067-2229357.

(16) நயிட்டா மாவட்ட அலுவலகம்-கேகாலை, இல. 440, கண்டி வீதி, மீபிட்டியா, கேகாலை.
தொலைபேசி இல.: 035-2223127.

(17) நயிட்டா மாவட்ட அலுவலகம்-நுவரெலியா, இல. 5, மேல் வாவி வீதி, நுவரெலியா.
தொலைபேசி இல.: 052-2223702.

(18) நயிட்டா மாவட்ட அலுவலகம்-காலி, உடவத்தை, பத்தேகமை.
தொலைபேசி இல.: 091-5677388.

(19) நயிட்டா மாவட்ட அலுவலகம்-அம்பாந்தோட்டை, இல. 34, மிஹிந்து மாவத்தை, தங்காலை.
தொலைபேசி இல.: 047-2241512.

(20) நயிட்டா மாவட்ட அலுவலகம்-திருகோணமலை, இல. 57, தபால் நிலைய வீதி, திருகோணமலை.
தொலைபேசி இல.: 026-2221709.

(21) நயிட்டா மாவட்ட அலுவலகம்-மட்டக்களப்பு, இல. 16/1, புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு.

(22) நயிட்டா மாவட்ட அலுவலகம்-வவுனியா, இராசதுரை வீதி, வைரவ புளியன்குளம், வவுனியா.
தொலைபேசி இல.: 024-2220442.

(23) நயிட்டா மாவட்ட அலுவலகம்-புத்தளம், மோல வத்தை, மாதம்பே

(24) நயிட்டா மாவட்ட அலுவலகம்-பொலன்னறுவை, இல. ஏ-6, மஹாவெலி விடுதி, புதிய நகரம், பொலன்னறுவை.
தொலைபேசி இல.: 027-2223023.

(25) நயிட்டா மாவட்ட அலுவலகம்-மன்னார், பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல.: 034-3942823.

(26) நயிட்டா மாவட்ட அலுவலகம்-மொணறாகலை கச்சேரித் தொகுதி, மொணறாகலை.
தொலைபேசி இல.: 055-2276504.

9.4 விண்ணப்பதாரிகள் கீழே 9.5 இல் விவரித்தபடி யாதேனும் மக்கள் வங்கிக் கிளையில் 500 ரூபாவைச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்பொழுது வங்கிக் கொடுப்பனவுச் சிட்டை இணைக்கப்படல் வேண்டும்.

9.5 கொடுப்புத் துண்டு கீழ்வருவனவற்றைச் சேர்த்து சரியாகப் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும் :-

(1) கிளைக் குறியீடும், கணக்கு இலக்கமும் : 276-1-001-2-4535909.

(2) *வரவு அறிவுறுத்தல் :* தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, கட்டுநாயக்கா மக்கள் வங்கியிலுள்ள 276-1-001-2-4535909 ஆம் இலக்க சேகரிப்புக் கணக்கிற்கு வரவாக்குக.

(3) விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும்.

9.6 விண்ணப்பம், இணைய தளத்திலிருந்து பெற்றுக்கொள்ப வர்கள், பரீட்சைக் கட்டணமாக ரூபா 600 ஐ செலுத்த வேண்டும்.

9.7 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் வங்கியின் தகவுடைய அலுவலரால் கையொப்பமிடப்பட்ட கொடுப்புத் துண்டோடு, இணைக்கப்பட்டு பதிவுத்தபாலில் ''பணிப்பாளர்/அதிபர், எந்திரவியல் தொழிநுட்பவியல் நிறுவகம், டெம்பல் வீதி, கட்டுநாயக்கா'' என்னும் முகவரிக்கு 2011.06.18 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மூலையில் ''எந்திரவியல் சிறப்புப் பயிலுநர்களை ஆட்சேர்த்தல் விண்ணப்பம் - 2011'' எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9.8 அரசாங்க தொழிநுட்ப கல்லூரிகளில் டிப்ளோமா பாடநெறியினை அல்லது பட்டப்படிப்பினை முழு நேரமாக மேற்கொண்டோர் அல்லது மேற்கொள்வோர் விண்ணப்பிப் பதற்கு தகுதியற்றவர் ஆவர்.

9.9 விண்ணப்பத்துடன் சான்றிதழ்களையோ அவற்றின் பிரதிகளையோ அனுப்பலாகாது.

9.10 விண்ணப்பத்தினைப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

10. விண்ணப்பத்திற்கு அஞ்சலில் ஏற்படக்கூடிய தாமதம் அல்லது தொலைந்து போதலுக்கு இந்நிறுவகம் பொறுப்பேற்காது. எனவே, முன்கூட்டியே விண்ணப்பத்தை அஞ்சலிடவும்.

தலைவர்.

தேசிய பயிற்சி, கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,
இல. 971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய.

**ජාතික ආධුනිකත්ව හා කාර්මික පුහුණු කිරීම් අධිකාරිය**
**தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை**
NATIONAL APPRENTICE AND INDUSTRIAL TRAINING AUTHORITY

**ඉංජිනේරු තාක්ෂණ ආයතනය - කටුනායක**
எந்திர தொழிநுட்பவியல் நிறுவகம் - கட்டுநாயக்கா
Institute of Engineering Technology - Katunayake
(Former Technician Training Institute)

ඉංජිනේරු විද්‍යා ජාතික ඩිප්ලෝමා පාඨමාලාව සඳහා ඉංජිනේරු විද්‍යා විශේෂ ආධුනිකයින් බඳවා ගැනීමේ අයදුම් පත්‍රය - 2011 කණ්ඩායම
***தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறிக்கு (NDES) எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களை ஆட்சேர்த்தல் - 2011 குழு***
*APPLICATION FOR THE RECRUITMENT OF SPECIAL APPRENTIES IN ENGINEERING FOR NATIONAL DIPLOMA IN ENGINEERING SCIENCES (NDES) COURSE - 2011 BATCH*

1. සම්පූර්ණ නම/முழுப்பெயர்/Name in Full:

2. මුලකුරු සමඟ නම/பெயர் (முதலெழுத்துக்களுடன்)/Name with Initials :

3. ලිපිනය/முகவரி/Address :

   (i) දුරකථන අංකය/தொலைபேசி இல./ Telephone No.:

4. දිස්ත්‍රික්කය/மாவட்டம்/District :-

5. ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාශය/பிரதேச செயலாளர் பிரிவு/ Divisional Secretariat :-

6. උපන් දිනය : දිනය මාසය වර්ෂය
   பிறந்த திகதி : திகதி மாதம் ஆண்டு
   Date of Birth : Date Month Year

7. ස්ත්‍රී/පුරුෂ භාවය :
   பால் (ஆண்/பெண்) :
   Sex (M/F) :

8. ජාතික හැඳුනුම්පත් අංකය/தேசிய அடையாள அட்டை இல./ National Identity Card No :

9. අධ්‍යාපන සුදුසුකම්/கல்வித் தகைமைகள்/Educational Qualification :-

   (i) අ. පො. ස. (සා. පෙ)/க. பொ. த. (சா. த.)/GCE O/L : එකම වසරක දී සමත් වූ විෂයයන්/ ஒரே அமர்வில் சித்திபெற்ற பாடங்கள்/Subjects Passed at one and same sitting :

   වර්ෂය/ஆண்டு/Year :

   විභාග මධ්‍යස්ථානය/ : பரீட்சை நிலையம்/Examination Centre :

   විභාග අංකය/சுட்டெண்/Index No. :

| විෂයය<br>பாடம்<br>*Subject* | සාමාර්ථය<br>தரம்<br>*Grade* |
|---|---|
| 1 ගණිතය/கணிதம்/ Mathematics | |
| 2 විද්‍යාව/விஞ்ஞானம்/Science | |
| 3 භාෂාව/மொழி/Language | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |
| 11 | |
| 12 | |

   (ii) අ. පො. ස (උ. පෙළ) එකම වරක දී සමත්වූ විෂයයන්/ க. பொ. த. (உ. த.) ஒரே தடவையில் சித்தியடைந்த பாடங்கள்/ G. C. E. (A/L) Subjects passed in one sitting :

   වර්ෂය/ஆண்டு/Year :

   විභාග මධ්‍යස්ථානය/பரீட்சை நிலையம்/Examination Centre :

   විභාග අංකය/சுட்டெண்/Index No.:

   සාමාන්‍ය Z ලකුණු/சராசரி Z புள்ளிகள்/Average Z Score:

| பாடம்<br>විෂයය<br>*Subject* | இணைந்த கணிதம்<br>සංයුක්ත ගණිතය<br>*Combined Maths* | பௌதீகவியல்<br>භෞතික විද්‍යාව<br>*Physics* | இரசாயனவியல்<br>රසායන විද්‍යාව<br>*Chemistry* |
|---|---|---|---|
| සාමාර්ථය<br>தரம்<br>*Grade* | | | |

(iii) අ. පො. ස. (උ. පෙළ) සඳහා පෙනී සිටි වාර සංඛ්‍යාව/ க. பொ. த. (உ. த.) இல் தோற்றிய அமர்வுகளின் எண்ணிக்கை /Number of sittings for GCE A/L Exam. :

10. කැමැත්තේ අනුපිළිවෙලට විශේෂිත ක්ෂේත්‍ර වර්ගීකරණය (කැමැත්ත අනුපිළිවෙලට 1 සිට 09 දක්වා ලකුණු කරන්න.) :
சிறப்பாக்கங்களின் துறைகளுக்கான விருப்பொழுங்கு (விருப்பொழுங்கினை அடிப்படையாகக் கொண்டு 1 முதல் 9 வரை குறிப்பிடுக.) :
Order of Preference of fields of Specialization (Mark from 1 to 09 based on order of preference) :

| *Se. No* | *Field* | *Code* | *Preferences* |
|---|---|---|---|
| 1 | Building and Structural Engineering | CB | |
| 2 | Highway and Railway Engineering | CH | |
| 3 | Water and Environmental Engineering | CW | |
| 4 | Electronics Engineering | EE | |
| 5 | Electrical Power Engineering | EP | |
| 6 | Telecommunication Engineering | ET | |
| 7 | Mechanical (Automotive) Engineering | M A | |
| 8 | Mechanical (General) Engineering | M G | |
| 9 | Marine Engineering | M M | |

11. මුදල් ගෙවූ රිසිට්පත මෙහි අලවන්න.
பணம் செலுத்திய பெறுவனவுத் துண்டை இங்கு ஒட்டுக.
Stick paying Receipt

මෙම ඉල්ලුම් පත්‍රයෙහි සපයා ඇති විස්තර දැන්වීමෙහි සඳහන් සුදුසුකම්වලට අනුකූල බව ද, සත්‍ය හා නිවැරදි බව ද, මම විශ්වවිද්‍යාලයක හෝ වෙනත් රජයේ අධ්‍යාපන ආයතනයක පූර්ණ කාලීන උපාධි හෝ ඩිප්ලෝමා පාඨමාලාවක් හැදෑරීම සඳහා ලියාපදිංචි වී නැති බව ද සනාථ කරමි. මෙහි ඇතුළත් යම්කිසි තොරතුරක් අසත්‍ය හෝ වැරදි බව සනාථ වුවහොත් මෙම පුහුණු පාඨමාලාවට තෝරා ගැනීමෙන් පසුව වුව ද කිසිම මුදලක් නොගෙවා මා පාඨමාලාවෙන් ඉවත් කළ හැකි බව ද මම දනිමි.

மேலே தந்துள்ள தகவல்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும், அவை விளம்பரத்திலான தகைமைகளுக்கு ஒத்துள்ளதெனவும் மேலும் பல்கலைக்கழகமொன்றிலோ அல்லது யாதேனுமொரு அரசாங்க கல்வி நிறுவகமொன்றிலோ பதிவுசெய்து கொள்ளவில்லை என இத்தால் உறுதி கூறுகின்றேன். பயிற்சி நிகழ்ச்சி முறை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னரேனும், மேற்படி தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவையென கண்டுபிடிக்கப்படின், நட்டஈட்டுக்கான எதுவித கோரிக்கையுமின்றி பயிற்சி நிகழ்ச்சி முறையிலிருந்து நீக்கப்படுதலை ஏற்கத் தயாராயுள்ளேன்.

I do hereby certify that the information furnished above is true and correct and confirm to the qualifications laid in the advertisement and I have not registered for Full Time Degree or Diploma in a University or any other Government Academic Institutions. I hereby state that I am prepared to accept discontinuance from the training programme without any claim for compensation, if any of the above information is found to be false or inaccurate even after the commencement of the training programme.

----,
අයදුම්කරුගේ අත්සන.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
Signature of Applicant.

දිනය/திகதி/ Date :----.

කාර්යාලීය ප්‍රයෝජනය සඳහා
அலுவலக உபயோகத்திற்கானது
for office use only

4-701